Source: *Tamil Murasu,* p3
Date: 31 December 2016

சிங்கப்பூர் பயணத்துறைக் கழகத்தின் புதிய தலைவராக சாலி மா



சிங்கப்பூர் பயணத்துறைக் கழகத்தின் புதிய தலைவராக சிங்கப்பூர் அனைத்துலக வர்த்தக சபையின் தலைவர் திரு சாலி மா சீ கியோங் ஜனவரி 1ஆம் தேதியிலிருந்து பொறுப்பேற்கிறார் என்று வர்த்தக தொழில் அமைச்சு நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்தது.

தற்போதைய தலைவரான திரு சியூ சூன் செங்குக்குப் பதிலாக நியமிக்கப்பட்டுள்ள திரு மா, சிங்கப்பூர் கணக்கியல் ஆணையம், சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் வர்த்தகப் பள்ளி ஆலோசனைக் குழு ஆகியவற்றின் தலைவராகவும் உள்ளார்.

பதவியிலிருந்து விலகும் திரு சியூவின் பங்களிப்பைப் பாராட்டிய வர்த்தக தொழில் அமைச்சின் நிரந்தரச் செயலாளர் லோ கம் யியேன், "சுற்றுப்பயணத்துறையின் உத்திகளுக்கு மறுவடிவம் கொடுத்த திரு சியூ, சிங்கப்பூரை ஒரு சிறந்த உல்லாச மற்றும் வர்த்தகத் தளமாக உருவாக்க உதவினார்," என்றார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.